இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 25-09-2023

# நீட் = பூஜ்யம்

**நீட் = பூஜ்யம்**

**- இதுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருக்கும் ஒற்றை வரி தீர்ப்பு. நீட் தேர்வினால் ஏற்படும் பலன் என்பது பூஜ்யம்தான் என்பதை இதை விடத் தெளிவாகச் சொல்ல முடியாது.**

முதுநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் கட் ஆப் மதிப்பெண் என்பது பூஜ்யமாக இருந்தாலும் பரவாயில்லை என்று சொல்லி இருப்பதன் மூலமாக நீட் தேர்வை அம்பலப்படுத்தி விட்டார்கள். தகுதி, திறமைக்கும் இந்தத் தேர்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை தேர்வு நடத்துபவர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

2023-24-ம் கல்வி ஆண்டு முதுநிலை மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு கடந்த மார்ச் 5 ஆம் தேதி நடந்தது. இதற்கான முடிவுகள் மார்ச் 14 ஆம் தேதி வெளியிடப்பட்டன. பொதுப்பிரிவினர், பொருளாதாரத்தில் நலிவடைந்த பொதுப்பிரிவினருக்கு 291 மதிப்பெண்ணும், பொதுப்பிரிவினரில் மாற்றுத்திறனாளிகளுக்கு 274 மதிப்பெண்ணும் ஓ.பி.சி., எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு (மாற்றுத்திறனாளிகள் உட்பட) 257 மதிப்பெண்ணும் இதற்கான கட்-ஆப்பாக நிர்ணயிக்கப்பட்டு, கலந்தாய்வு நடத்தப்பட்டது. இதையடுத்து தமிழகத்தில் அகில இந்திய ஒதுக்கீடு போக, மற்ற இடங்களுக்கான மாநில கலந்தாய்வு கடந்த ஆகஸ்ட் 7- ஆம் தேதி தொடங்கியது. இதன் முடிவில் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு அதிக இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, அவற்றை நிரப்புவதற்காக நீட் தகுதி மதிப்பெண்ணை பூஜ்யம் என்று மருத்துவக் கலந்தாய்வுக் குழு அறிவித்திருக்கிறது.

இந்திய மருத்துவக் கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், **“2023 ஆம் ஆண்டுக்கான முதுநிலை படிப்புக்கான கட் ஆப் மதிப்பெண்ணை பூஜ்யமாக மத்திய குடும்ப நலத்துறை அமைச்சகம் குறைத்துள்ளது. இது அனைத்து வகையிலும் பொருந்தும். முதுநிலை மருத்துவ மேற்படிப்புக்காக புதிதாக பதிவு செய்பவர்கள் மற்றும் 3 ஆம் கட்ட கலந்தாய்வில் பங்கேற்க உள்ளவர்களுக்கும் மற்றும் தகுதி பெற்றவர்களுக்கும் மீண்டும் கலந்தாய்வில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. புதியவர்கள் இதைப் பயன்படுத்தி 3 ஆவது கலந்தாய்வில் பங்கேற்கலாம். ஏற்கனவே பதிவு செய்து இருப்பவர்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை”** என்று கூறப்பட்டு இருந்தது.

நீட் தேர்வில் பெறும் கட் ஆப் மதிப்பெண்ணை வைத்தே முதுநிலைப் படிப்பில் இடங்கள் கிடைக்கும். இந்த மதிப்பெண்ணை பூஜ்யமாகக் குறைத்துவிட்டது ஒன்றிய குடும்ப நலத்துறை அமைச்சகமும், இந்திய மருத்துவக் கவுன்சிலும்.

ஏன் என்று கேட்டால், **‘நாட்டில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப் படிப்புக்கான இடங்களில் மாணவ, மாணவியர் சேர்வதற்கு இந்த ஆண்டு ஆர்வம் காட்ட வில்லை’ என்கிறார்கள். மாணவர்கள் சேரவில்லை என்பதற்காக, பூஜ்யம் மதிப்பெண் எடுத்திருந்தாலும் போதும் என்பதை விட மோசடி இருக்க முடியுமா? அப்படியானால், தனியார் மருத்துவக் கல்லூரிகளின் நன்மைக்காகத்தான் இந்திய மருத்துவக் கவுன்சில் இருக்கிறதா? இவர்களது சட்டதிட்டங்கள் அனைத்தும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் சொல்வதின் அடிப்படையில்தான் போடப்படுகிறதா?**

**தனியார் கல்லூரிகளில் இடம் காலியாக இருக்கிறது, இதனால் தனியார் கல்லூரிக்கு வருமானம் இல்லை. எனவே கட் ஆப் மதிப்பெண்ணை குறைத்து விட்டோம் என்று விதிகளை திருத்துவதற்கு வெட்கமாக இல்லையா?**

தனியார் பயிற்சி மையங்களைக் கோடி கோடியாக கொழிக்க வைப்பதற்காகவே நீட் தேர்வை நடத்துவதும் - மருத்துவக் கல்லூரியில் இடம் காலியாக இருக்கிறது என்பதற்காக - நீட் தேர்வு மதிப்பெண் தேவையில்லை - அவர்கள் தேர்வு எழுதி இருந்தால் போதும் என்பதும் - இந்திய மருத்துவக் கவுன்சில் யாருக்காகச் செயல்படுகிறது? யாருடைய ஏவலுக்குத் தலையாட்டுகிறது?

**அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் நிரம்பி விட்டது, தனியார் கல்லூரியை நிரப்ப பூஜ்யம் தகுதியாக மாற்றப்படுமானால் ஒன்றிய பா.ஜ.க. அரசு தனியாருக்குச் சொந்தமான அரசு என்று தானே சொல்ல முடியும்.**

கழக மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் கேட்ட கேள்விகள் மிக முக்கியமானவை. **“12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக் கல்வி வழங்கப்பட்ட போது குறைந்த பட்ச, 50 விழுக்காடு மதிப்பெண் எடுத்தால்தான் விண்ணப்பிக்கவே முடியும் என்ற சூழல் இருந்தது. அது தகுதி இல்லை, தரம் இல்லை, நான் நீட் தேர்வு வைக்கிறேன், அதுதான் தகுதி, தரம் என்று சொன்ன ஒன்றிய அரசே உனது தகுதி, தரம் இப்போது எங்கே போனது?”** என்று கேள்வி எழுப்பி இருக்கிறார். **“நீட் தேர்வில் 200 கேள்விகளுக்கும் தவறான பதில் எழுதி ‘-200’ மதிப்பெண் ஒருவர் பெற்றாலும் உயர் மருத்துவப் படிப்புக்குத் தகுதியானவர் என்று ஒன்றிய அரசு சொல்கிறது. இதுதான் நீட் தேர்வு சொல்லும் தகுதியா?”** என்றும் மருத்துவர் எழிலன் கேட்டுள்ளார். இதற்கெல்லாம் அவர்களிடம் முறையான பதிலை எதிர்பார்க்க முடியாது.

**‘நீட் தேர்வில் உச்ச பட்ச மதிப்பெண் பெற்றவர்களுக்கு மட்டுமே இடம் கிடைக்கும், நீட் தேர்வில் பூஜ்யம் மதிப்பெண் எடுத்தவர்களுக்கு நிச்சயம் இடம் கிடைக்காது’** என்று ஜோசியம் சொல்லி இருக்கிறார் முன்னாள் மருத்துவரும் இந்நாள் கவர்னருமான தமிழிசை. பூஜ்யம் எடுத்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்பதே அவர்களும் உள்ளே நுழைய ஏற்படுத்தித் தரும் வாய்ப்புதான். அதிக மதிப்பெண் எடுத்தவர்கள் அனைவருக்கும் இடம் கிடைத்துவிடுவதும் இல்லைதானே?!

**குறைந்த மதிப்பெண் எடுத்திருந்தாலும் பணம் கொடுத்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து விடுகிறார்கள் என்று சொல்லி நீட் தேர்வைக் கொண்டு வந்தவர்கள், ‘பூஜ்யம்’ எடுத்தாலும் விண்ணப்பிக்கலாம் என்று சொன்னால் இந்த தேர்வு எதற்காக? எதற்காக ‘நீட்’ என்ற வேண்டாத கொடுமையைக் கட்டி அழுகிறீர்கள்?**

## சோமாலியாவில் தற்கொலை படை தாக்குதல்!

பெலிட்வி, செப். 25 -

ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் உள்ள பெலிட்வி நகரில் நேற்று முன்தினம் வெடிமருந்து நிரப்பிய லாரி வந்தது. அங்குள்ள சோதனை சாவடி அருகே சென்ற போது அந்த லாரியில் இருந்த வெடிபொருட்கள் வெடித்து சிதறியது. பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் லாரியில் இருந்த வெடிபொருட்களை வெடிக்க செய்து இந்த தற்கொலை படை தாக்குதலில் ஈடுபட்டனர்,

இந்த தற்கொலை படை தாக்குதலில் அப்பகுதியை சேர்ந்த 15 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். இதில் 5 பேர் போலீஸ்காரர்கள் ஆவார்கள், 40க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த தாக்குதலில் சம்பவம் நடந்த இடம் அருகே இருந்த கட்டிடங்கள் இடிந்து விழுந்தது. இதன் இடிபாடுகளில் பலர் சிக்கி தவித்து வருகின்றனர். அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. இதனால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த தாக்குதலில் ஈடுபட்டது யார்? என்று தெரியவில்லை. எந்த பயங்கரவாத அமைப்பும் இதற்கு பொறுப்பேற்கவில்லை. இது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.9.2023) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பாலாஜி தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது துணைவியார் டாக்டர் சர்மிளா உள்ளார்.

### திருப்பூர் - படியூரில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட

## தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்!

**திருப்பூர், செப். 25 -**

**தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில், மேற்கு மண்டலத்திற்குட்பட்ட தி.மு.க. “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் திருப்பூரில் நடைபெற்றது. இதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

முன்னதாக இதில் கலந்துகொள்வதற்காக நேற்று காலை கோவை வருகை தந்த முதல்வர் அவர்களுக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும் கோவையில் இருந்து திருப்பூர் வரை வழியெங்கும் மக்கள் திரளாக திரண்டு எழுச்சிமிகு வரவேற்பளித்தனர்.

தலைவரின் அறிவுறுத்தலின் படி, வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஜூலை 26ஆம் தேதி டெல்டா மண்டல பயிற்சி பாசறை கூட்டம் திருச்சியிலும், ஆகஸ்ட் 17 ஆம் தேதி தென் மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்திலும் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

இதையடுத்து மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் “வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம்” நேற்று திருப்பூர் மாவட்டம், படியூரில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நேற்று மாலை கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, கரூர், கோவை மாநகர், கோவை வடக்கு, கோவை தெற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நீலகிரி ஆகிய 14 தி.மு.க. மாவட்டங்களின், மாவட்டச் செயலாளர்கள், வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**முதல்வருக்கு சிறப்பான வவேற்பு!**

இதில் கலந்து கொள்வதற்காக நேற்று காலை வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கோவை விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விமான நிலையத்தில் பேண்டு வாத்தியங்கள் முழங்க முதலமைச்சருக்கு காவல்துறை மரியாதை அளிக்கப்பட்டது. இதன் பின்பு, தி.மு.க.வினர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதில் அமைச்சர்கள் சு.முத்துச்சாமி, மு.பெ.சாமிநாதன், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையர் பிரதாப், தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மாநகர காவல்துறை ஆணையாளர் பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர்.

**சாலைப் பணிகள் ஆய்வு!**

தொடர்ந்து அங்கு நடைபெற்று வரும் சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதல்வர் அவர்கள் திருப்பூரில் நடைபெறும் வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

முதல்வர் அவர்களுக்கு கோவையில் இருந்து பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெறும் இடம் வரை கழகத்தினர், பொதுமக்கள் சாலையின் இருபுறங்களிலும் நின்று வாழ்த்து முழக்கங்கள் இட்டு எழுச்சியுடன் வரவேற்றனர்.

## புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில்கள் ஆன்மிகச் சுற்றுலா!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

*சென்னை, செப்.25-*

*முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (23.09.2023) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் இந்துசமய அறநிலையத்துறை சுற்றுலாத்துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள. புரட்டாசி மாத வைணவத் திருக் கோயில் ஆன்மிகச் சுற்றுலாவினை கொடியசைத்து தொடங்கி வைத்து, திருக்கோயில் பிரசாதங்களை வழங்கினார்.*

*அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :*

*புரட்டாசி மாதத்தை முன்னிட்டு இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் ஆன்மீக சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆன்மீக சுற்றுலா என்பது ஒரே நாளில் வைணவ திருக்கோவில்களுக்கு 6 திருக்கோயில்களுக்கு காலையில் தொடங்கி மாலைக்குள் 6 வைணவ திருக்கோயில்களில் பக்தர்களுக்கு சிறப்பு தரிசனம் செய்து வைக்கப்பட்டு அந்தந்த திருக்கோயில்களின் பிரசாதங்களும், மதியஉணவும் வழங்கப்படுகின்றது. இன்றைய தினம் ஆன்மிகச் சுற்றுலா திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் 2 பயணத்திட்டங்களாகவும், மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய 4 மண்டலங்களில் இன்றுதொடங்கப்பட்டுள்ளது.*

*கடந்த ஆடி மாதத்தில் ஒரே நாளில் 6 அம்மன் திருக்கோயில்கள், எட்டு திருக்கோயில்கள் என இரண்டு பிரிவாக பிரித்து அம்மனை தரிசிப்பதற்கு இதேபோன்று ஒரு ஆன்மிகச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுசுமார் 1,000க்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றது உள்ளபடியே மகிழ்ச்சியைதருகிறது. மகா சிவராத்திரி பெருவிழா கடந்தாண்டு 5 சிவா லயங்களில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதேபோலநவராத்திரியை முன்னிட்டு ஒரே இடத்தில் பிரசித்தி பெற்ற 9 அம்மன்களை தரிசனம் செய்யக்கூடிய அளவில் ஒரு நிகழ்ச்சியினை நவராத்திரி விழாவாக ஏற்பாடு செய்ய இருக்கின்றோம். அந்தநிகழ்விலே கொலுவும் அமைக்கப்பட இருக்கின்றது. இப்படி பக்தர்களுடைய தேவைக்கேற்ப, பக்தர்கள் மகிழ்ச்சியுறபல்வேறுதிட்டங்களை இந்து சமய அறநிலைத் துறைமுதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வருகிறது.*

*இன்றைக்கு திருவல்லிக்கேணியில் தொடங்கப்பட்டுள்ள ஆன்மிகச் சுற்றுலாவில் 62 நபர்கள் பங்கேற்றுள்ளனர். முதல்திட்டத்தில் திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில், பெசன்ட் நகர், அஷ்டலெட்சுமி திருக்கோயில், திருவிடந்தை, நித்ய கல்யாண பெருமாள் திருக்கோயில், மாமல்லபுரம், ஸ்தல சயன பெருமாள் திருக்கோயில், சிங்கப்பெருமாள் கோவில், பாடலாத்ரி நரசிம்மர் திருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ண பெருமாள் திருக்கோயில் ஆகியதிருக்கோயில்களுக்கு 34 நபர்களும்,*

*இரண்டாவது திட்டத்தில் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிதிருக்கோயில், திருநீர்மலை, நீர்வண்ண பெருமாள் திருக்கோயில், திருமுல்லைவாயில், பொன் சாமி பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர், வைத்திய வீர ராகவபெருமாள்திருக்கோயில், திருபெரும்புதூர், ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில், பூந்தமல்லி, வரதராஜபெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட திருக்கோயில்களுக்கு 28 நபர்களும் அழைத்து செல்லப்படுகின்றனர். இந்த இரண்டு திட்டங்களிலும் பக்தர்களுக்கு கட்டணமில்லா சிறப்பு தரிசனம் செய்து வைக்கப்பட்டு, திருக்கோயில் பிரசாதம், திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய கையேடுடன், மதிய உணவும்வழங்கப்படுகிறது.*

*சனாதானவிவகாரத்தில் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது குறித்து செய்தியாளர்கள் கேட்டீர்கள், அதனை சட்டப்படி எதிர்கொள்வோம் என்று தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், இணை ஆணையர்கள் ச.இலட்சுமணன், திருமதி கி.ரேணுகா தேவி, திருமதி ஜ.முல்லை துணை ஆணையர்/செயல் அலுவலர் சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.அய்யம்மாள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ், நகர்மன்றத் தலைவர் க.திருமலைச்சாமி, நகர்மன்ற துணைத் தலைவர் ப.வெள்ளைச்சாமி, மாவட்ட வன அலுவலர் மு.ராஜ்குமார், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன் உட்பட பலர் உள்ளனர்.